



# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 284 | 07.04.2026 | TUESDAY | PANGUNI: 24 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 284 | 07.04.2026 | செவ்வாய்கிழமை | பங்குனி : 24 | விலை : ரூ.5/–


## பெரும்பான்மை பெற்று

# "அதிமுக ஆட்சி அமைக்கும்"

## எடப்பாடி பழனிசாமி நம்பிக்கை

மேட்டூர்: ஏப்.7-

"அதிமுக தலைமையிலான கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெறும். அதிமுக அதிக இடங்களில் பெரும்பான்மையாக வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும்" என அக்கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மாநிலம் முழுவதும் தீவிர பிரச்சாரத்தை கொண்டு வருகிறார் . இந்நிலையில், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி இன்று எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு எதிரே எடப்பாடி தொகுதி தேர்தல் பணிமனையை திறந்து வைத்தார்.

பின்னர், அங்கிருந்து வேட்புமனு தாக்கல் செய்ய வட்டாட்சியர் அலுவலகத்துக்குச் சென்ற அவருக்கு பொதுமக்கள் மற்றும் அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள், கூட்டணி கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தொடர்ந்து, எடப்பாடி சட்டப்பேரவை தொகுதியில் 8வது முறையாக போட்டி யிட இன்று தேர்தல் நடத்தும் அலுவலரான நடராஜனிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். பின்னர் உறுதி மொழியையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியது: ? "அதிமுகவுக்கு



வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. தேமுதிகவுக்கு அரை சதவீதம்தான் வாக்கு வங்கி உள்ளது. தேமுதிகவுக்கு மாநிலங்களவை உறுப்பினர் சீட் வழங்குவதாக சொன்னேன். அதற்குள் அவர்கள் அணி மாறி விட்டார்கள்.

உதயநிதி ஸ்டாலின் சிபிஎஸ்இ பள்ளி நடத்தி வருகிறார். அதில் மும்மொழி பாடமும் நடத்தப்படுகிறது. தங்களுக்கு தேவை என்றால் மட்டும் எந்த மொழியை வேண்டுமானாலும் அனுமதிப்பார்கள்.

தமிழகத்தில் நடைபெறுவது சட்டப்பேரவை தேர்தல். மக்களவை தேர்தல் அல்ல என முதல்வர் புரிந்துகொண்டு பேச வேண்டும்.

ஒன்று, இரண்டு திட்டங்கள் விடுபட்டிருந்தால் மீண்டும் சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற்று அதிமுக ஆட்சி அமைந்தவுடன் விடுபட்ட அனைத்தும் நிறைவேற்றி தரப்படும்.

15ம் தேதி கன்னியாகுமரியில் பிரதமர் பங்கேற்கும் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் நானும் பங்கு பெறுகிறேன். ஆளுநரிடம் கொடுக்கப்பட்ட ஊழல் பட்டியலை விட, அமலாக்கத் துறை ஆதாரத்துடன் டிஜிபிக்கு அனுப்பிய ஊழல் புகார் குறித்து வழக்குப் பதிவு செய்யாமல் இருந்தனர். அதிமுக சார்பில் நீதிமன்றத்தை நாடி உத்தரவு பெற்றும் வழக்குப் பதிவு செய்யப்படவில்லை. அதிமுக ஆட்சி அமைந்தவுடன் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். அதிமுக ஆட்சி யில்தான் சட்டத்தின் ஆட்சி நடைபெற்றது.

தமிழகத்தில் அதிமுக பல்வேறு திட்டங்களை தந்த கட்சி. தற்போது மிகப் பெரிய வலிமையான எதிர்க்கட்சியாக உள்ளது.

ஆ.ராசா தொடர்பாக வெளியான ஆடியோ இந்திய அளவில் வைரலாகியது. கருணாநிதி உடல்நிலை சரி யில்லாமல் இருந்தபோது வீட்டு சிறையில் வைக்கப்பட்டதாகவும், பட்டியல் இன மக்களிடம் பாகுபாடு பார்க்கப்பட்டதாகவும் ஆடியோவில் பேசப்பட்டிருந்தது. அது குறித்துதான் நான் கருத்து கூறினேன். ராசா மீது நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு என் மீது பாய்வதில் என்ன இருக்கிறது?

அதிமுக தலைமையிலான கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெறும். அதிமுக அதிக இடங்களில் பெரும்பான்மையாக வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும்" என்றார்.

8வது முறையாக போட்டி: அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடந்த 1989ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் சேவல் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின்னர், 1991, 2011,2016, 2021 ஆகிய தேர்தல்களில் வெற்றி பெற்றார். 1996, 2006 ஆகிய சட்டப்பேரவை தேர்தல்களில் தோல்வி அடைந்தார். தற்போது, 8வது முறையாக மீண்டும் எடப்பாடி தொகுதியில் போட்டி யிடுகிறார்.

### திருச்சி கிழக்கு

## சோலி முடியும் திமுக...

### வெல்லப்போகும் விஜய்...

திருச்சி, ஏப்.7-

பெரும்பான்மையாக கிறிஸ்தவர்கள் வசிக்கும் திருச்சி கிழக்குப் பகுதியில், தற்போது எம்எல்ஏவாக இருக்கும் இனிகோ இருதயராஜ் மீண்டும் திமுக சார்பில் போட்டியிடுகிறார். திமுகவில் மீண்டும் இவருக்கே வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒரு கிறிஸ்தவர் என்பதனால்தான் மீண்டும் வெற்றிக் கொடியை நாட்டி விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்த இனிகோ இருதயராஜிக்கு, தவெக தலைவர் விஜய் திருச்சி கிழக்கு தொகுதியில் போட்டி யிடுவது தெரிந்ததிலிருந்து, படு அப்செட்டாகி உறைந்து போயுள்ளாராம்.

அதன்பிறகு விஜய் திருச்சி கிழக்கு தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்துவிட்டு, பிரச்சாரத்தில் ஆற்றிய உரையை கேட்டதும், திமுக வேட்பாளர் ரொம்பவே நொந்து போய்விட்டாராம்.





தற்போது தற்போதைய எம்எல்ஏவுக்கு தொகுதியில் பெரிய அளவில் கெட்ட பெயர் இல்லாத போதிலும், விஜயின் வரவு தடுமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

மற்ற சமூகத்தினரும், புதிதாக வந்துள்ள நடிகர் ஒருவருக்கு வாய்ப்பு கொடுத்துதான் பார்க்கலாமே என்று முடிவு செய்துள்ளதாகவே தெரிய வருகிறது.

கட்சி காரர்களுக்கும் பெரிய அளவில் எதுவும் செய்து விடவில்லை என்ற புலம்பல் ஒரு பக்கம் கேட்கத்தான் செய்கிறது. தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், வணிகர்கள் போன்றோரிடம் எதிர்ப்பு அலைகளையே சம்பாதித்ததாக தெரிய வருகிறது.

திருச்சி கிழக்கு தொகுதியில் விஜய் போட்டியிடுவதாக அறி வித்திருந்த சூழ்நிலையை விட தற்போது விஜய்க்கு இன்னும் கூடுதலாக ஆதரவு பெருகி வருவதாக பலதரப்பட்ட வாக்காளர்களும் பரபரப்பாக பேசி வருகிறார்கள்.

இது இவ்வாறிருக்க பூர்வீக தமிழர் கட்சியின் நிறுவனரும், பத்திரிகையாளருமான பன்னீர்செல்வம் என்பவரும் திருச்சி கிழக்கு தொகுதி ரேஸில் களத்தில் உள்ளார் என்பது கூடுதல் தகவல்.

## எடப்பாடி தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்தார் பழனிசாமி

சென்னை: ஏப்.7-

அதிமுக பொதுச் செயலாளரும், தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி, சேலம் எடப்பாடி சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிட தனது வேட்பு மனுவை இன்று (ஏப் 06) தாக்கல் செய்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 234 தொகுதிகளிலும் ஒரேகட்டமாக ஏப்.23 ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பு கடந்த மார்ச் 15ம் தேதி வெளியானது. இந்நிலையில், தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது. மனுக்கள் பரிசீலனை நாளை நடைபெறுகிறது. இறுதி வேட்பாளர் பட்டியல் ஏப்.9ம் தேதி வெளியாகிறது.

இதனிடையே, சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று (ஏப் 06) வேட்பு மனு தாக்கல் செய்தார். இவர் 8வது முறையாக எடப்பாடியில் களம் காண்கிறார். அதோடு, மயிலம் தொகுதியில் அதிமுக வேட்பாளர் சி.வி.சண்முகம் உள்ளிட்டோரும் வேட்பு மனுத் தாக்கல் செய்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, "243 தொகுதிகளில் 210 தொகுதிகளில் அதிமுக கூட்டணி வெல்லும். வரும் 15ம் தேதி நடைபெற உள்ள பிரதமர் மோடியின் குமரி பிரச்சாரத்தில் பங்கேற்க உள்ளேன்.

உதயநிதியே சிபிஎஸ்சி பள்ளி நடத்திக் கொண்டிருக்கிறார். அவர்கள் பள்ளி நடத்தினால் என்ன மொழியை வேண்டுமானாலும் அனுமதிப்பார்கள்.

அதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட அனைத்து திட்டங்களும் தொடரும். எடப்பாடி மக்களின் பெரும்பாலான கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளேன். ஒன்று இரண்டு கோரிக்கைகள் விடுபட்டிருந்தால் அதையும் நிறைவேற்றுவேன். சட்டப்பேரவைத் தேர்தல் நடக்கிறது.

இதில் ஏன் திமுக டெல்லியுடன் போட்டி போட வேண்டும்? திமுக ஆட்சியில் முடக்கி வைக்கப்பட்டுள்ள அதிமுகவின் திட்டங்கள் மீண்டும் கொண்டுவரப்படும். அதிமுக ஆட்சியில் சட்டத்தின் ஆட்சி நடைபெற்றது. திமுக எம்.பி ஆ.ராசா பேசிய ஆடியோ வைரலானது. அது குறித்துதான் நான் கருத்து சொன்னேன். அவரை விட்டுவிட்டு என்மேல் பாய்வதில் என்ன இருக்கிறது. பெரும்பான்மையோடு அதிமுக கூட்டணி தான் ஆட்சி அமைக்கும்" இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

வேட்புமனு தாக்கலின் முதல் நாளான (மார்ச் 30) அன்றே கொளத்தூர் தொகுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலின், பெரம்பூர் தொகுதியில் தவெக தலைவர் விஜய் மனுத் தாக்கல் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இன்றுடன் வேட்புமனு தாக்கல் நிறைவடைவதால், பல்வேறு கட்சியினரும் மனு தாக்கலில் மும்முரம் காட்டி வருகின்றனர். சென்னை மயிலாப்பூர் தொகுதியில் பாஜக வேட்பாளர் தமிழிசை சவுந்தர்ராஜன் வேட்புமனு தாக்கல் செய்தார்.

மதுரை மேற்கு தொகுதி அதிமுக வேட்பாளர் செல்லூர் ராஜு அச்சம்பத்தில் உள்ள மேற்கு தாலுகா அலுவலகத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

தருமபுரியில் பாமக வேட்பாளர் சவுமியா அன்புமணி ஆயிரக் கணக்கானோருடன் ஊர்வலமாக சென்று வேட்பு மனு தாக்கல் செய்தார்.

## சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கு: குற்றவாளிகள் 9 பேருக்கும் மரண தண்டனை விதிப்பு

மதுரை: ஏப்.7-

சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் குற்றவாளிகள் 9 பேருக்கும் மரண தண்டனை வித்ததது உயர் நீதிமன்றம் மதுரை கிளை.

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான் குளத்தைச் சேர்ந்த ஜெயராஜ் மற்றும் அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோர் சாத்தான்குளத்தில் செல்போன் கடை நடத்தி வந்தனர். கரோனா ஊரடங்கின் போது குறித்த நேரத்தைத் தாண்டி கடையை திறந்து வைத்திருந்ததாகக் கூறி, இவர்கள் இருவரையும் கடந்த 2020 ஜூன் 19ம் தேதி இரவு சாத்தான்குளம் போலீஸார், காவல் நிலையம் அழைத்துச் சென்று கடுமையாகத் தாக்கினர்.

இதில் ஜூன் 22ம் தேதி பென்னிக்ஸும், 23ம் தேதி ஜெயராஜும் உயிரிழந்தனர். இந்த வழக்கை சிபிசிஐடி விசாரித்த நிலையில், உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவின்படி, சிபிஐ விசாரணைக்கு மாற்றப்பட்டது. இதை கொலை வழக்காக சிபிஐ பதிவு செய்து, காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், சிறப்புசார்பு ஆய்வாளர் பால்துரை, தலைமைக் காவலர் முருகன், காவலர்கள் சாமதுரை, முத்துராஜா, செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகிய 10 பேர் கைது செய்யப்பட்டு, மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். இதில் பால்துரை சிறையில் உடல்நலக் குறைவால் உயிரிழந்தார்.

இந்த வழக்கு விசாரணை கடந்த 5 ஆண்டுகளாக மதுரை நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. மொத்தம் 100க்கும் மேற்பட்ட





சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, கடந்த 23ம் தேதி நீதிபதி முத்துக்குமரன் தீர்ப்பளித்தார். ''தந்தை, மகன் இருவரையும் கம்பு, கம்பி போன்ற ஆயுதங்களால் போலீஸார் கொடூரமாகத் தாக்கியுள்ளனர். மரணத்தை விளைவிக்கும் காயங்கள் உருவாகும் வகையில் இருவரும் தாக்கப்பட்டுள்ளனர்.

அவர்களது உடலில் இருந்த காயங்கள் இயற்கைக்கு மாறாக, மரணத்தை விளைவிக்கும் அளவுக்கு இருந்துள்ளன. இதுபோன்ற கொடூர தாக்குதல்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் நடந்ததாக கேள்விப்பட்டுள்ளோம். அதுபோல போலீஸார் தாக்கியுள்ளனர். இருவரையும் இரவு 8 மணி முதல் அதிகாலை 3 மணி வரை போலீஸார் தாக்கியுள்ளனர். தவிர, இருவர் மீதும் போலீஸார் பொய் வழக்கு பதிவு செய்துள்ளனர். இதற்காக போலி ஆவணங்களை உருவாக்கியுள்ளனர்.

போலீஸார் தாக்கியதால்தான் தந்தை, மகன் இருவரும் உயிரிழந்தனர் என்ற முடிவுக்கு நீதிமன்றம் வருகிறது. சாட்சியங்களின் அடிப்படையில் 9 பேர் மீதான கொலைக் குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வழக்கில் ஸ்ரீதர் உள்ளிட்ட 9 பேரும் குற்றவாளிகள் என முடிவு செய்யப்படுகிறது. இவர்களுக்கான தண்டனை விவரம் மார்ச் 30ம் தேதி (நேற்று) அறிவிக்கப்படும்'' என தெரிவித்தார்.

இதையடுத்து, குற்றவாளிகள் 9 பேருக்கும், மதுரை அரசு மருத்துவமனையில் உடல், மனநல பரிசோதனை நடத்தப்பட்டு, அதற்கான அறிக்கையை மருத்துவர்கள் நீதிமன்றத்தில் நேற்று தாக்கல் செய்தனர். இதைத் தொடர்ந்து, குற்றவாளிகள் 9 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். உயிரிழந்த ஜெயராஜ், பென்னிக்ஸ் குடும்பத்தினரும் வந்திருந்தனர்.

நீதிபதி முத்துக்குமரன் முன்பு இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது தண்டனை விவரம் தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் அறிக்கை தாக்கல் செய்யாததால், ஏப்.2ம் தேதி தண்டனை விவரம் அறிவிக்கப்படும் என நீதிபதி உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்திருந்தார்.

இதற்கிடையே, குற்றவாளிகள் 9 பேருக்கும் உச்சபட்ச தண்டனை வழங்க வேண்டும் என, உயிரிழந்த ஜெயராஜ் குடும்பத்தினர் வலியுறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், நீதிபதி முத்துக்குமரன் முன்பு இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது, "இது அரிதினும் அரிதான வழக்கு. தந்தை, மகன் இருவரையும் இரவு முழுவதும் காவல்நிலையத்தில் அடைத்து வைத்து, விடிய விடிய தாக்கி, கொடுமையாக கொலை செய்துள்ளனர். ஜெயராஜ், பெனிக்ஸை பழிவாங்கும் நோக்கில் தாக்கியுள்ளனர். அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளனர். காவல் மரணங்கள் கொடூரமானடு என்று உச்ச நீதிமன்றம் சொல்லியுள்ளது. ஆனாலும், இந்தக் குற்றம் குறைந்தபாடில்லை. அண்மையில் கூட மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் காவல் மரணமடைந்தார்.

சாத்தான்குளம் சம்பவத்தில், காவல் ஆய்வாளர்கள் ஸ்ரீதர் தாக்கியதால் மற்ற காவலர்களும் இணைந்து தாக்கியதாகக் கூறியுள்ளனர். அவர்கள் நினைத்திருந்தால் உயரிதிகாரிகளிடம் கூறி இந்தச் சம்பவத்தை தடுத்திருக்கலாம். ஆனால், குற்றத்துக்கு உடந்தையாக இருந்துள்ளனர். அந்த வகையில் அவர்களும் குற்றவாளிகளே. எனவே, குற்றவாளிகள் 9 பேருக்கும் இந்த நீதிமன்றம் மரண தண்டனை விதிக்கிறது," என்றார்.

# "கேரள முதல்வரின் சொந்த மாவட்டத்தில் கூட வளர்ச்சி இல்லை" டி.கே.சிவகுமார் விமர்சனம்



திருவனந்தபுரம், ஏப்.7-
"கேரள முதல்வர் பினராயி விஜயனின் சொந்த மாவட்டத்தில் கூட எவ்வித முன்னேற்றமும் இல்லை" என்று கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவரும், கர்நாடக துணை முதல்வருமான டி.கே.சிவகுமார் விமர்சித்தார்.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய டி.கே.சிவகுமார், "எல்டிஎஃப் அரசு கேரளாவுக்கு என்னதான் வளர்ச்சித் திட்டங்களை செய்துள்ளது? கண்ணூர் என்பது முதல்வரின் சொந்த மாவட்டம். அங்குள்ள பல கட்சித் தொண்டர்களிடம் நான் பேசினேன். இந்த மாவட்டத்துக்கு ஏதேனும் சுற்றுலா மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் வந்துள்ளனவா என்று நான் அவர்களிடம் கேட்டேன். இந்த மாவட்டத்துக்காக எதுவும் செய்யப்படவில்லை என்று அவர்கள் என்னிடம் தெரிவித்தனர். முதல்வரின் சொந்த மாவட்டமே வளர்ச்சியடையாத நிலையில், ஒட்டுமொத்த மாநிலத்தின் நிலைமை எப்படி இருக்கும் என்பதை நான் உணர்ந்துகொண்டேன்" என்று கூறினார்.

இதற்கிடையில், கேரளாவின் பேராவூரில் பேசிய காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி, "நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் போராட்டங்களையும் நான் மிக நெருக்கமாகக் காண்கிறேன். நான் சந்திக்கும் மக்கள் அனைவரும் நல்ல கல்வித் தகுதி பெற்றவர்கள்.

கேரளாவில் நன்கு படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் இருப்பதில்லை; அப்படியே வேலை கிடைத்தாலும், அந்த வேலைகள் மாநிலத்துக்கு வெளியேதான் உள்ளன. கேரளாவுக்குள் வேலை வாய்ப்புகள் குறைவாக இருப்பதால், மக்கள் இடம்பெயர வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது" என்று கூறினார்.

2026 கேரள சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 9 அன்று நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை மே 4 அன்று நடைபெறுகிறது.



■ திமுக வேட்பாளர் மார்க்



■ விளாத்திகுளம் அதிமுக வேட்பாளர்

# "விளாத்திகுளத்தில் வீசும் மாற்றுக் காற்று!" "வைட்டமின் 'சி' விவகாரம் ஜாதி ரீதியான பேச்சுகளால் சிக்கலில் திமுக! அதிர வைக்கும் முதற்கட்ட தேர்தல் களம்

விளாத்திகுளம் ஏப்.7-
தூத்துக்குடி மாவட்டத்தின் மிக முக்கியமான மற்றும் பரபரப்பான தொகுதியாக விளாத்திகுளம் மாறியுள்ளது. ரெட்டியார் மற்றும் நாயக்கர் சமுதாய மக்கள் அதிகம் கொண்ட இப்பகுதியில், தேர்தல் களம் தற்போது சூடுபிடித்துள்ளது.

*வேட்பாளர் மீதான விமர்சனம்:* கடந்த முறை திமுக சார்பில் வெற்றி பெற்ற 'மார்க்' (எ) மார்க்கண்டேயன், அதிமுகவிலிருந்து கட்சி மாறியவர் என்பதால் "கலர் கலராக நிறம் மாறுபவர்" என்ற விமர்சனம் எழுந்துள்ளது. மேலும், ஒரு குறிப்பிட்ட ஜாதி மக்களிடம் வேறுபாடுகளைத் தூண்டும் வகையில் பேசியதாகவும், "வைட்டமின் சி (பணம்) கொடுத்துப் பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறியதாகவும் எழுந்த தகவல்கள், கூட்டணிக் கட்சியான PMT மற்றும் பொதுமக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

*அதிமுகவின் எழுச்சி:* அதிமுக வேட்பாளர் சத்யா, ஒரு சிங்கத்தைப் போலத் தொகுதியைத் தனது வசப்படுத்துவார் என தொண்டர்கள் மத்தியில் பேச்சு எழுந்துள்ளது. இது அதிமுக தொண்டர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

*பத்திரிகையாளர்கள் அதிருப்தி:* இருப்பினும், அதிமுக வேட்பாளர் தரப்பிலிருந்து பத்திரிகையாளர்களுக்குச் சரியான நேரத்தில் தகவல்கள் வழங்கப்படுவதில்லை எனத் தெரிகிறது. தகவல் தொடர்பில் கோட்டை விட்டால் தோல்வி நிச்சயம் என தொண்டர்களிடையே பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.

*"விளாத்திகுளத்தில் வீசும் மாற்றுக் காற்று!"*
ஆளுங்கட்சி வேட்பாளர் மீதான தனிப்பட்ட புகார்கள், இந்த முறை விளாத்திகுளம் தேர்தல் முடிவுகளில் பெரிய திருப்பத்தை ஏற்படுத்தும் எனத் தெரிகிறது. தற்போது விளாத்திகுளம் தொகுதியில் பொதுமக்களிடையே பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழக பேரவைத் தேர்தல் 2026க்கான வேட்புமனு தாக்கல் நிறைவு



சென்னை, ஏப்.7-
தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று (ஏப்.6) பிற்பகல் 3 மணியுடன் நிறைவடைந்தது.

234 தொகுதிகளுக்கான தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை மே 4ஆம் தேதி நடைபெறுகிறது. இதற்காக மார்ச் 30 ஆம் தேதி தொடங்கிய வேட்புமனுத் தாக்கல், இன்று பிற்பகல் 3 மணியுடன் நிறைவடைந்தது. நாளை வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறவுள்ள நிலையில், இறுதி வேட்பாளர் பட்டியல் ஏப்ரல் 9ஆம் தேதி வெளியாகிறது.

வேட்புமனுத் தாக்கலுக்கான கடைசி நாளான இன்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய இணையமைச்சர் எல்.முருகன், பாஜகவின் வானதி சீனிவாசன் ஆகியோர் தங்கள் வேட்புமனுவை தாக்கல் செய்தனர். தனது மகனுக்கு மாற்றாக திமுக அமைச்சர் காந்தியும் இன்று வேட்புமனுத் தாக்கல் செய்தார்.

வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைந்த நிலையில், சுமார் 4300க்கும் மேற்பட்டோர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். இதில் அதிகபட்சமாக கரூரில் 93க்கும் மேற்பட்டோர் வேட்புமனு அளித்துள்ளனர்.

தமிழகத்தில் நான்குமுனைப் போட்டி நிலவுகிறது. திமுக தலைமையிலான கூட்டணியில் காங்கிரஸ், தேமுதிக, விசிக, இடதுசாரிகள் உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன. அதிமுக கூட்டணியில் பாஜக, பாமக, அமமுக உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன. நாம் தமிழர் கட்சி மற்றும் தவெக கட்சிகள் தனித்தனியாக 234 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

# திருச்சி கல்வி நிறுவனத்தில் வருமானவரி துறையினர் திடீர் சோதனை




திருச்சி, ஏப்.7-
திருச்சி கல்வி நிறுவனத்தில் வருமான வரித் துறையினர் நேற்று சோதனை நடத்தினர். திருச்சி கிழக்கு தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் ராஜசேகரன் நடத்தி வரும் திருச்சிமதுரை தேசிய நெடுஞ்சாலையில் மணிகண்டம் பகுதியில் உள்ள இந்திரா கணேசன் கல்வி நிறுவனத்தில் வருமானவரித் துறை அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர்.

கல்வி நிறுவனத்துக்கு நேற்று மாலை 4.30 மணியளவில் 2 கார்களில் வந்த அதிகாரிகள் தொடர்ந்து சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ராஜசேகரன் நேற்று காலை தனது பிரச்சாரத்தை தொடங்கிய நிலையில், மாலையில் அவருக்கு சொந்தமான கல்வி நிறுவனங்களில் வருமானவரித் துறை அதிகாரிகள் சோதனை நடத்தியது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



# தேர்தலில் போட்டியிடுவதால் பதவியை ராஜினாமா செய்தார் தஞ்சாவூர் மேயர்

தஞ்சாவூர், ஏப்.7-
நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடுவதால் தனது பதவியை தஞ்சாவூர் மேயர் சண்.ராமநாதன் ராஜினாமா செய்தார்.

தஞ்சாவூர் மாநகராட்சி 45 வது வார்டில் இருந்து மாமன்ற உறுப்பினராக கடந்த 2022ம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் சண். ராமநாதன் தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து மாமன்ற உறுப்பினர்களால் தஞ்சாவூர் மாநகராட்சிக்கு மேயராக அவர் தேர்வு செய்யப்பட்டார்.

அடுத்த ஆண்டு 2027 மார்ச் மாதம் வரை இவரது பதவிக்காலம் இருந்த நிலையில் நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலில் இவர் திமுக சார்பில் போட்டியிடுகிறார். இதற்காக இன்று காலை அவர் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

அதற்கு முன்பாக தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலகத்திற்கு வந்து ஆணையர் அறையில் தனது மாமன்ற உறுப்பினர் பதவியையும், மாநகராட்சி மேயர் பதவியையும் ராஜினாமா செய்து தனித்தனி கடிதங்களில் கையெழுத்திட்டு ஆணையர் கண்ணனிடம் வழங்கினார். அப்போது இதுவரை எனக்கு ஒத்துழைப்பு கொடுத்தமைக்கு நன்றி என நா தழு தழுக்க பேசினார்.

இதையடுத்து மாநகராட்சி அலுவலகத்தை விட்டு வெளியே வந்த போது அங்கிருந்த வாட்ச்மேன் ரவிச்சந்திரன் என்பவர் வழக்கம் போல அவருக்கு வணக்கம் செலுத்தினார். இதையடுத்து அவருக்கு ஒரு சால்வையை அணிவித்து, "இதுவரை என்னை வரவேற்ற உங்களுக்கு நான் எப்போதும் துணையாக இருப்பேன்," என அவரைக் கட்டித் தழுவி இருவரும் கண்ணீர் மல்க ஒருவருக்கொருவர் ஆறுதல் தெரிவித்துக் கொண்டனர்.

# தென் மாவட்டங்களில் இன்று முதல் சசிகலா பிரச்சாரம்



சென்னை, ஏப்.7-
அதிமுக ஒருங்கிணைப்பு முயற்சியில் ஈடுபட்டு வந்த சசிகலா, இறுதியாக அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் என்ற புதிய கட்சியை தொடங்கினார்.

இக்கட்சி, இந்த தேர்தலில் பாமக நிறுவனர் ராமதாஸுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுகிறது. சசிகலா இதுவரை 5 கட்டங்களாக 80 வேட்பாளர்களை அறிவித்துள்ளார்.

இன்றுடன் வேட்புமனு தாக்கல் நிறைவடைந்தது. இன்று (ஏப்.7) பிரச்சாரத்தை தொடங்குகிறார்.

இது தொடர்பாக கட்சி தலைமை அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் சசிகலா, இன்று முதல் 10ம் தேதி வரை, இக்கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

அதன்படி நாளை, திருப்பரங்குன்றம், மதுரை மத்தி, திருமங்கலம், சோழவந்தான், உசிலம்பட்டி, ஆண்டிபட்டி தொகுதிகளிலும், 8ம் தேதி போடி, நிலக்கோட்டை, திண்டுக்கல், மேலூர், தொகுதிகளிலும், 9ம் தேதி சிவகங்கை, மானாமதுரை, திருச்சுழி, அருப்புக்கோட்டை, சாத்தூர் தொகுதிகளிலும், 10ம் தேதி சிவகாசி, ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜபாளையம், வாசுதேவநல்லூர், சங்கரன்கோவில் ஆகிய தொகுதிகளிலும் பிரச்சாரம் மேற்கொள்கிறார். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



# முதுகுளத்தூரில் உரிய ஆவணம் இல்லாமல் எடுத்துச் சென்ற ரூ.10 கோடி தங்க, வைர நகைகள் பறிமுதல்

ராமநாதபுரம், ஏப்.7-
ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தொகுதியில் உரிய ஆவணமின்றி எடுத்துச் சென்ற ரூ.9.47 கோடி மதிப்பிலான தங்க வைர, வெள்ளி நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

முதுகுளத்தூர் தொகுதி தேர்தல் நிலையான கண்காணிப்புக் குழு அலுவலர் ராஜேஸ்வரன் தலைமையிலான பறக்கும் படையினர் சாயல்குடி அருகே கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள கன்னிராஜபுரம் சோதனைச் சாவடியில் சனிக்கிழமை இரவு வாகனத் தணிக்கையில் ஈடுபட்டனர்.


அப்போது தூத்துக்குடி சாலை வழியாக திருப்பரங்குன்றம் ஹார்விபட்டியைச் சேர்ந்த செல்வகுமார் மகன் ராஜா (36) என்பவர் காரில் வந்தார். காரை தேர்தல் பறக்கும் படையினர் சோதனையிட்டதில் 18 பெட்டிகளில் தங்கம், வைரம், வெள்ளி நகைகள் இருந்தன.

விசாரணையில் மதுரையில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த நகைகள் என்றும், ஆர்டரின் பேரில் எடுத்துச் செல்வதாகவும் கூறினார்.

ஆனால், உரிய ஆவணங்கள் இல்லாததால் ரூ.9.47 கோடி நகைகள் பறிமுதல் செய்யப்பட்டு முதுகுளத்தூர் துணை வட்டாட்சியர் ராஜ்குமாரிடம் ஒப்படைக்கப்பட்டது

# ராமதாஸ் அறிவித்த வேட்பாளர்களை இழுக்கும் அன்புமணி தரப்பு!





விருத்தாசலம், ஏப்.7-
தந்தை மகன் இடையே ஏற்பட்ட மோதலால் பாமக இரு அணியாக பிரிந்து தேர்தலில் களம் காண்கிறது. இதில் அன்புமணி தலைமையிலான பாமக அதிமுக கூட்டணியில் 18 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

ராமதாஸ் தலைமையில் 5 கட்டங்களாக 15 வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர். விருத்தாசலம் தொகுதியில் அன்புமணி தரப்பில் மருத்துவர் தமிழரசி வேட்பாளராக களமிறக்கப்பட்டிருக்கும் சூழலில், அங்கு ராமதாஸ் தரப்பில் இ.கே.சுரேஷ் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இவரிடம் அன்புமணி தரப்பு பேச்சுவார்த்தை நடத்தியது. ஆனால் அவர் பிடிகொடுக்காமல் பேசிவருவதாக அன்புமணி தரப்பு நிர்வாகிகள் கூறுகின்றனர். இதுதொடர்பாக சுரேஷை தொடர்புகொண்டு பேசியதில், "நான் தனித்துதான் போட்டியிடுகிறேன். ஒரே கட்சி என்பதால் என்னிடம் பேசினர்.

ஆனால் என்னை வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினேன்" என்றார். இதற்கிடையில் 2021 தேர்தலில் அதிமுக கூட்டணியில் பாமக வேட்பாளராக களமிறங்கி சொற்ப எண்ணிக்கையில் தோல்வியடைந்த கோ. ஜெகன், ராமதாஸ் அணியில் இருந்துவந்தார்.

இதனால் அவர் ராமதாஸ் தரப்பில் நெய்வேலி தொகுதி வேட்பாளராக களமிறங்கக் கூடிய சூழல் நிலவியது. ஆனால் நெய்வேலி தொகுதியில் அதிமுக நேரடியாக களமிறங்கியுள்ளது. எனவே ராமதாஸ் தரப்பில் கோ.ஜெகன் களமிறக்கப்படலாம் என ராமதாஸ் ஆதரவாளர்கள் நம்பியிருந்தனர்.

இந்தச் சூழலில் ராமதாஸ் அறிவித்த வேட்பாளர்கள் பட்டியலில் கோ.ஜெகன் பெயர் இடம்பெறவில்லை. இதையடுத்து அதிமுக தரப்பு, ஜெகனை இழுத்தால் மேலும் ஆதரவு கிடைக்கும் என அன்புமணியிடம் பேசியதாக தெரிகிறது. அதைத்தொடர்ந்து கூட்டணி தர்மத்தைப் பின்பற்றி அன்புமணி தரப்பு கடந்த சில தினங்களாக ஜெகனிடம் பேச்சுவார்த்தை நடத்தியது.

பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட முன்னேற்றத்தை தொடர்ந்து அவர் நேற்று பனையூர் சென்று அன்புமணியை சந்தித்தார். அன்புமணி தலைமையிலான பாமகவில் இணைவது குறித்து ஜெகனிடம் பேசியதில், "இனி கட்சி சின்ன ஐயா தான். வேட்புமனு தாக்கல் முடிந்தவுடன் அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்வேன்" என்று குறிப்பிட்டார்.

இதனிடையே விக்கிரவாண்டி தொகுதியில் ராமதாஸ் அணி வேட்பாளராக களமிறக்கப்பட்ட புகழேந்தியையும் அன்புமணி தரப்பு இழுத்துவிட்டதால், விக்கிரவாண்டிக்கு த.ஸ்டாலினை வேட்பாளராக அறிவித்துள்ளார் ராமதாஸ்.

அன்புமணி தரப்பில் பாமக வேட்பாளர்களாக களமிறக்கப்பட்ட தொகுதிகளில் ராமதாஸ் போட்டி வேட்பாளர்களை களமிறக்குவதும், அவ்வாறு களமிறக்கப்படுபவர்களை தங்கள் பக்கம் இழுப்பது என்ற வேலையை அன்புமணி தரப்பும் மேற்கொள்வதால் பாமகவினர் குழப்பத்தில் உள்ளனர்.

# சென்னை - எலி மருந்து தடவிய தேங்காயில் சட்னி: 3 பேருக்கு தீவிர சிகிச்சை

சென்னை, ஏப்.7-
விருகம்பாக்கத்தில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் தோழிகள் 6 பேர் அறை எடுத்து தங்கி படித்து வந்தனர். இதை அறியாத 3 பேர் அந்த தேங்காயை பயன்படுத்தி தோசைக்கு சட்னி தயாரித்து சாப்பிட்டுள்ளனர். சிறிது நேரத்தில் அவர்களுக்கு உடல்நல பாதிப்பு ஏற்பட்டது. அதன் பிறகுதான் தேங்காயில் எலி மருந்து தடவிய தகவல் தெரியவந்தது. 3 பேரும் ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.



■ தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ஊர்வசி அமிர்தராஜ், சாத்தான்குளத்தில் வேட்பு மனு தாக்கல் செய்து, காமராஜர் சிலை முன்பு ஒட்டு வேட்டை. அருகில் திருச்செந்தூர் சட்டமன்ற திமுக வேட்பாளர் அனிதா ராதாகிருஷ்ணன், சாத்தான்குளம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் பாலமுருகன், சாத்தான்குளம் வடக்கு ஒன்றிய செயலாளர் ஜோசப், சாத்தான்குளம் மத்திய ஒன்றிய செயலாளர் பொன் முருகேசன் மற்றும் பலர்.



■ திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில், வேட்பாளர் விடியல் சேகர், கூட்டணி கட்சி பொறுப்பாளர்களுடன் இணைந்து தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். நிகழ்வில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் திரளான ஆதரவாளர்கள் கலந்து கொண்டு உற்சாகமாக வாழ்த்து தெரிவித்தனர்.வேட்புமனு தாக்கல் செய்த பின்னர், "தேர்தலில் வெற்றி பெற்று தொகுதி மக்களின் நலனுக்காக முழுமையாக பணியாற்றுவேன்" என விடியல் சேகர் உறுதியளித்தார்.




■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தமிழ் நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ந்கான வேட்பு மனு தாக்கல் கோட்டாட்சியர் அலுவலகத்தில், அகில இந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்ற கழகம் கட்சி வேட்பாளர் வசந்தி முருகேசன், கோட்டாட்சியர் ஆ. அனிதா அவர்களிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். திருநெல்வேலி மாவட்ட பஞ்சாயத்து துணை தலைவர் தர்மராஜ் மாவட்ட பொறுப்பாளர் வள்ளி நாயகம், திருநெல்வேலி மாவட்ட பஞ்சாயத்து துணை தலைவர் தர்மராஜ் , தென்காசி மாவட்ட பொறுப்பாளரர் வள்ளி நாயகம், சங்கரன் கோவில் M.P. கோட்டூர் சாமி பாண்டியன். பசும்பொன் மக்கள் தேசம் கட்சி சுப்பிரமணியன் தென்னிந்திய பார்வேர்ட் பிளாக் தென்காசி மாவட்ட செயலாளர் அகியோர் உடன் இருந்தனர்.

## சட்டை அணியாமல் வேட்பு மனு தாக்கல் செய்ய வந்த விருதுநகர் சுயேச்சை வேட்பாளர் சொன்ன காரணம்

விருதுநகர், ஏப்.7-

விருதுநகரில் வேட்பு மனு தாக்கல் செய்ய சுயேச்சை வேட்பாளர் ஒருவர் சட்டை அணியாமல் வந்தது சலசலப்பை ஏற்படுத்தியது. விருதுநகர் அருகேயுள்ள சத்திரரெட்டியார்பட்டியை சேர்ந்தவர் அமிர்தபாண்டி (30). இவர் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுவதற்காக விருதுநகர் வட்டாட்சியர் அலுவலகத்துக்கு மனு தாக்கல் செய்ய வந்தார். அப்போது மேலாடை இன்றி கால் சட்டையுடன் வந்த அவரை நுழைவாயிலில் பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸார் தடுத்து நிறுத்தினார்."இன்றைய அடிதட்டு மற்றும் ஏழை, எளிய மக்களின் நிலை வறுமையில் இருக்கிறது.



அதனை வெளிப்படுத்தும் வகையில்தான் மேலாடை இன்றி வந்ததேன்" என்று கூறி அவர் வாக்குவாதம் செய்தார். இருப்பினும் நன்னடத்தை விதிகளை பின்பற்றி முறைப்படிதான் மனு தாக்கல் செய்ய வேண்டும் என போலீஸார் தெரிவித்தனர்.இதனை ஏற்றுக்கொண்ட அந்த இளைஞர் அதே இடத்திலேயே சட்டை அணிந்தார். பின்னர், மனு தாக்கல் செய்ய வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் வந்து வேட்பு மனு தாக்கல் செய்தார். இதனால் அப்பகுதியில் சற்று நேரம் சலசலப்பு ஏற்பட்டது

## விஜய் பிரச்சாரத்தில் அனுமதிக்கப்பட்டதை விட அதிகம் பேர் கூடியதாக புகார்

### புதுச்சேரி தவெக நிர்வாகி மீது வழக்கு

புதுச்சேரி, ஏப்.7-

தவெக தலைவர் விஜய் பிரச்சாரத்தில் அனுமதிக்கப்பட்டதை விட அதிகம் பேர் கூடியதாக அக்கட்சி நிர்வாகி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் கடந்த 3ம் தேதி தவெக வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சித் தலைவர் விஜய் பிரச்சாரம் மேற்கொண்டார். முன்னதாக விஜய் பிரசாரத்துக்கு 5 ஆயிரம் பேர் மட்டுமே கூட வேண்டும். கர்ப்பிணி பெண்கள், குழந்தைகளுக்கு அனுமதி கிடையாது என்பது உள்பட பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே, தவெக நிர்வாகி புதியவன் மீது கோரிமேடு காவல் நிலையத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரி அன்பரசன் புகார் அளித்துள்ளார். அதில், தட்டான்சாவடி ஒழுங்கு முறை விற்பனை கூட மைதானத்தில் 5 ஆயிரம் பேருக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்ட நிலையில் 8 ஆயிரத்தில் இருந்து 10 ஆயிரம் பேர் விஜய் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்றதாகவும் தேர்தல் விதிமுறைகளை மீறியதாகவும் கூறியிருந்தார். புகாரின் அடிப்படையில், தவெக நிர்வாகி புதியவன் மீது கோரிமேடு போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

## "100 நாள் வேலைத் திட்டத்தை முடக்கப் பார்க்கும் அதிமுக பாஜக கூட்டணி!" ஐ.பெரியசாமி ஆவேசப் பேச்சு!

சின்னாளபட்டி, ஏப்.07-

அதிமுக ஞ பாஜக கூட்டணி தமிழகத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தை முடக்கப் பாக்கிறது என்று எஸ்.பாறைப்பட்டியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு. எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையில்தான் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறார் என்று ஐ.பெரியசாமி பொதுமக்கள் மத்தியில் பெருமிதமாக பேசினார்.

ஆத்தூர் தொகுதியில் திமுக சார்பாக ஐ.பெரியசாமி தொடர்ந்து 9வது முறையாக போட்டியிடுகிறார். ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராமங்களுக்கும் சூறாவளியாக சுற்றுப் பயணம் செய்து உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்து வருகிறார்.



ஆத்தூர் ஒன்றியம், எஸ்.பாறைப்பட்டி ஊராட்சிக்கு தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு 300க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பூரண கும்ப மரியாதையுடன் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். பொதுமக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, தமிழகத்தில் தற்போது போட்டியிடும் அதிமுக ஞ பாஜக கூட்டணி 100 நாள் வேலைத் திட்டத்தை முடக்கப் பார்க்கிறது. 100 நாள் வேலை திட்டம் இல்லையென்றால் கிராமங்களில் வேலை இல்லாத் திண்டாட்டம் உருவாகிறது. இதை உணர்ந்துதான் முத்தமிழ் அறிஞர் கலைஞரும், அன்னை சோனிய காந்தியும், 100 நாள் வேலை திட்டத்தை சட்டமாக்கினார்கள். இப்போது மத்தியல் ஆளும் பாஜக அரசு அதன் பெயரை மாற்றியதோடு, தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியையும் கொடுக்க மறுக்கிறது.

பாஜக அரசு தமிழகத்தில் 100 நாள் வேலைத்திட்டத்தை முடக்க நினைத்தால், நமது தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அதைத் தடுத்து நிறுத்துவார். தமிழகத்தை எப்போதும்; தலைகுனிய விடமாட்டார் என்றார். மீண்டும் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் ஆட்;சி அமைந்துடன் நீங்கள் வைத்த கோரிக்கைகள் அனைத்தும் 100 சதவீதம் நிறைவேற்றிக் கொடுக்கப்படும். இது உறுதி என்றார்.

பிரச்சாரத்தில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், ராஜேந்திரன், முருகேசன், முன்னாள் ஒன்றிய செயலாளார் பி.சி.முரளிதரன், முன்னாள் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் பாஸ்கரன், ஒன்றிய அவைத்தலைவர் காணிக்கைசாமி, மாவட்ட விவசாய துணை அமைப்பாளர் சொக்கலிங்கபுரம் சசிகுமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன், முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர்கள் நாகலெட்சுமி சசிகுமார், கருப்பையா, சிவக்குமார், ராஜேஸ்வரி தங்கவேல், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பாப்பாத்தி, மாவட்ட தகவல் தொழில்நுட்ட அணியைச் சேர்ந்த வாஞ்சிநாதன், கணேசன், கிளைச் செயலாளர் மாயப்பன், மற்றும் கிருஷ்ணன், மாயி, டாஸ்மாக் வடிவேல் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தற்காலிக போர்நிறுத்த நடவடிக்கைக்காக ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க முடியாது

### ஈரான் திட்டவட்டம்

தெஹ்ரான், ஏப்.7-

அமெரிக்காவும் ஈரானும் தற்காலிக போர்நிறுத்தம் குறித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வரும் நிலையில், தற்காலிக போர்நிறுத்தத்தின் ஒரு பகுதியாக ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறக்க ஈரான் மறுத்துவிட்டது.

மத்திய கிழக்கில் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக போர்நிறுத்த திட்டம் குறித்து அமெரிக்காவும், ஈரானும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன. ஆனாலும், தற்காலிக போர்நிறுத்தத்தின் ஒரு பகுதியாக ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறக்கப் போவதில்லை என்பதை ஈரான் தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த பேச்சுவார்த்தைகள், உடனடி போர்நிறுத்தம் மற்றும் அதனை தொடர்ந்து ஒரு விரிவான ஒப்பந்தம் என இரண்டு கட்ட செயல்முறையை முன்வைக்கிறது. இந்த



திட்டம் குறித்து பாகிஸ்தான் ராணுவத் தளபதி ஆசிம் முனீர், அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வேன்ஸ், சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காஃப் மற்றும் ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி ஆகியோருடன் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆனால், 'தற்காலிக போர்நிறுத்தத்தின் ஒரு பகுதியாக ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறக்க முடியாது. அதேபோல, இதில் ஒரு முடிவை எடுப்பதற்காக ஈரான் எந்த அழுத்தங்களையும் அல்லது காலக்கெடுவையும் ஏற்காது," என்று ஈரான் தரப்பில் உறுதியாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக, அமெரிக்கா, ஈரான் மற்றும் மத்தியஸ்தர்கள் இரு கட்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, 45 நாள் போர்நிறுத்தத்தைப் பரிசீலித்து வருவதாகவும், இது இறுதியில் மத்திய கிழக்கில் மோதலுக்கு நிரந்தர முடிவைக் கொண்டுவர வழிவகுக்கும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறக்க ஈரானுக்கு ட்ரம்ப் ஒரு இறுதிக் காலக்கெடுவை வழங்கியுள்ளார். இந்த காலக்கெடு செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு முடிவடைகிறது. மேலும், பேச்சுவார்த்தைகள் தொடர்வதாகவும், ஓர் உடன்பாடு எட்டப்படும் வாய்ப்பு இருப்பதாகவும், பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் ஈரான் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுப்போம் என்றும் ட்ரம்ப் கடுமையாக எச்சரித்தார்.




## 2025-26ம் நிதியாண்டில் 3,405 பெட்டிகளை தயாரித்து சென்னை ஐசிஎஃப் சாதனை

சென்னை, ஏப்.7-

ரயில் பெட்டித் தயாரிப்பில் உலகப் புகழ்பெற்ற இணைப்புப் பெட்டி தொழிற்சாலை (ஐ.சி.எஃப்.) பயணிகளின் தேவை மற்றும் காலத்துக்கு ஏற்ப, அதிநவீன ரயில் பெட்டி, சுற்றுலாவுக்கான ரயில் பெட்டி உட்பட 50க்கும் மேற்பட்ட வகைகளில் 600 வடிவமைப்புகளில் ரயில் பெட்டிகளை தயாரித்து வருகிறது.

இதுதவிர வந்தேபாரத் ரயில், அம்ரித் பாரத் ரயில்களும் தயாரித்து வழங்கப்படுகின்றன. சமீபத்தில் இங்கு 80 ஆயிரமாவது ரயில் பெட்டி தயாரிக்கப்பட்டது. இந்த ஆலையில் 202526ம் நிதியாண்டில் அதிக பெட்டிகள் தயாரித்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஐசிஎஃப் அதிகாரிகள் கூறியதாவது: 202526ம் நிதியாண்டில் மட்டும் 3,405 ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. கடந்த 202425ம் நிதியாண்டில் 3007 ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டன. இதனுடன் ஒப்பிடும்போது தற்போது 13.2 சதவீதம் உற்பத்தி உயர்ந்துள்ளது.

புதிய ரயில் பெட்டிகளில் வந்தே பாரத் தூங்கும் வசதி பெட்டிகள், வந்தே பாரத் ரயிலில் அமரும் நாற்காலி பெட்டிகள், மின்சார மற்றும் மெமு ரயில்களின் குளிர்சாதனப் பெட்டிகள் உள்ளிட்டவை மட்டும் 2,548 பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

22 அம்ரித் பாரத் ரயில்களுக்குரிய பெட்டிகளும் இதில் அடங்கும். கொல்கத்தா மெட்ரோவுக்கு உரிய ரயில் பெட்டிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## "மக்கள் நலனுக்காக உழைத்த அக்கா பாலபாரதி கரங்களால் முதல் பிரச்சாரம்!" ஐ.பி. செந்தில்குமார் நெகிழ்ச்சிப் பேச்சு!

சின்னாளபட்டி, ஏப்.7-

திண்டுக்கல் தொகுதியில் முதல் தேர்தல் பிரச்சாரத்தை மக்கள் நலனுக்க உழைக்கும் தோழர். பாலபாரதி தொடங்கி வைத்ததில் மகிழச்சி அடைகிறேன் என்று தலைமை தேர்தல் பணிமனை திறப்புவிழாவில் ஐ.பி.செந்தில்குமார் பேசினார்.

திண்டுக்கல் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமார் வேட்புமனு தாக்கல் செய்த பின்பு நேரடியாக திண்டுக்கல் ரவுண்ட்ரோட்டில் திமுக தலைமை தேர்தல் பணிமனை அலுவலத்திற்கு வந்தார். திண்டுக்கல் எம்.பி. ஆர்.சச்சிதானந்தம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாலபாரதி, மதிமுக செல்வராகவன் ஆகியோருடன் இணைந்து பணிமனையை திறந்து வைத்தார். அதன் பின்னர் தோழமை கட்சி



நிர்வாகிகளிடம் வாழ்த்து பெற்றார்.

வாழ்த்தி பேசிய தோழர் பாலபாரதி, இந்த திண்டுக்கல் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமார் ஒரு துடிப்பான இளைஞர், அனைத்து சமுதாய மக்களிடமும் அன்பாக பழகக்கூடியவர். பழனி சட்ட மன்ற தொகுதி உறுப்பினராக இருக்கும்போதும், எண்ணற்ற நலத்திட்டங்களை தொகுதி மக்களுக்கு செய்துள்ளார். வெற்றிபெற்று திண்டுக்கல் தொகுதியை முன்னேற்றமடைந்த தொகுதியாக மாற்ற வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

அதன் பின்னர் பேசிய ஐ.பி.செந்தில்குமார் திண்டுக்கல் தொகுதியில் நடந்த எனது முதல் பிரச்சாரத்தை அக்கா பாலபாரதி தொடங்கி வைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். காரணம், 3 முறை தொடர்ந்து திண்டுக்கல் சட்டமன்ற தொகுதியில் வெற்றிபெற்று அடித்தட்டு மக்களின் நலனுக்காக பாடுபட்டவர் சகோதரி பாலபாரதி அவர்கள். அவர் எனது பிரச்சாரத்தை தொடங்கியது நான் வெற்றி பெற்றது போல் என்றார்.

நிறைவாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மணிகண்டன் நன்றி கூறினார். விழாவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாவட்ட செயலாளர் பாண்டி, விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த மைதீன்பாவா, மற்றும் தோழமை கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, திமுக துணைச் செயலாளர்கள் ஆர்.நாகராஜன், பிலால்உசேன், மார்கிரெட் மேரி, திண்டுக்கல் மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், துணை மேயர் ராஜப்பா, ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ் செழியன், வெள்ளிமலை, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பொதுக்குழு உறுப்பினர்கள் கலைராஜன், அக்பர், வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் ராமராஜன் தவெக சார்பில், வேட்பாளர் ராமராஜன், விசில் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்யுமாறு பிரச்சாரம் செய்தார்.சங்கரன்கோவில் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆ.அனிதா அவர்களிடம் த.வெ.க வேட்பாளர் ராமராஜன் வேட்பு மனு தாக்கல் செய்தார். மாவட்ட இணைச்செயலாளர் சூர்யா, நகரச் செயலாளர் சரவணன், ஒன்றிய செயலாளர் கனகராஜ், த.வெ.க மாவட்ட செயற்குழு உறுப்பினர் தங்க மாரியப்பன் ஆகியோர் உடன் இருந்தனர்.



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 கான வேட்பு மனு தாக்கல் கோட்டாட்சியர் அலுவலகத்தில் அதிமுக தொகுதி வேட்பாளர் திலீபன் ஜெய்சங்கர், கோட்டாட்சியர் ஆ.அனிதா அவர்களிடம் வேட்பு மனு செய்தார். முன்னாள் நகர் மன்ற சேர்மன் ராஜி என்ற கண்ணன், தொகுதி பொறுப்பாளர் சின்னத்துரை, பாரதிய ஜனதா துணைத்தலைவர் ராஜலஷ்மி, குருவி குளம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் டி.பாண்டியராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மேற்கு தொகுதிக்கு உட்பட்ட பெத்தானியபுரத்தில் அதிமுக தேர்தல் காரியாலயத்தை மேற்கு தொகுதி அதிமுக வேட்பாளர் செல்லூர் ராஜு திறந்து வைத்தார். மதுரை மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் சோலைராஜா, அதிமுக நிர்வாகிகள் எம்.எஸ். பாண்டியன், . வில்லாபுரம் ராஜா மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ங்கான வேட்பு மனு தாக்கல் கோட்டாட்சியர் அலுவலகத்தில், புதிய தமிழகம் கட்சி வேட்பாளர் பிரபாகரன், சட்டமன்ற உறுப்பினருக்கான வேட்பு மனு உறுதி மொழி ஆவணத்தை கோட்டாட்சியர் ஆ. அனிதாவிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் மாவட்ட செயலாளர் ராசையா, மாநில பொறுப்பாளர் ராஜேந்திரன், நகர செயலாளர் சங்கராஜ், ஒன்றிய செயலாளர் வீரணாபுரம் கிளைச் செயலாளர் வேலச்சாமி.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் கட்டுப்பாட்டு மையத்தில், தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல்2026ஐ முன்னிட்டு தென்காசி மாவட்டத்திற்கென நியமிக்கப்பட்ட தேர்தல் பார்வையாளர்கள் நீரஜ்குமார், இ.ஆ.ப., (கடையநல்லூர், தென்காசி), புவனேஷ் பிரதாப்சிங், இ.ஆ.ப., (சங்கரன்கோயில், வாசுதேவநல்லூர்), ஈஷாபிரியா, இ.ஆ.ப., (ஆலங்குளம்) ஆகியோர் தேர்தல் தொடர்பாக, அலுவலர்கள் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட தேர்தல் அலுவலர் ஏ.கே. கமல் கிஷோர்.இ.ஆ.ப. உள்ளார்.



# தென்காசி சங்கரன்கோவிலில் முதலமைச்சர் ஸ்டாலின் பிரம்மாண்ட பிரச்சாரம்

தென்காசி, ஏப்.7-

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவிலில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார். ஆலங்குளம் தொகுதி கழக வேட்பாளர் முனைவர் பால் மனோஜ் பாண்டியன், தென்காசி கழக வேட்பாளர் டாக்டர் கலை கதிரவன், தென்காசி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், வாசுதேவநல்லூர் தொகுதி கழக வேட்பாளருமான ஈ. ராஜா, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடையநல்லூர் தொகுதி வேட்பாளர் ராஜேந்திரன், காங்கிரஸ் கட்சியின் சங்கரன்கோயில் தொகுதி வேட்பாளர் சங்கை கணேசன் ஆகியோரை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராணி ஸ்ரீகுமார், ராபர்ட் புரூஸ், திருநெல்வேலி மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் ஆவுடையப்பன்,

தென்காசி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் ஜெயபாலன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, முன்னாள் அமைச்சர் தங்கவேல், கூட்டுறவு வங்கியின் முன்னாள் நிர்வாகி மூர்த்தி பாண்டியன், மக்கள் விடுதலை கட்சியின் நிறுவனத் தலைவர் சு.க.முருகவேல் ராஜன், கூட்டணி கட்சி நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சார்ந்த நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 முன்னிட்டு 100% வாக்களிப்பது வலியுறுத்தி சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் தம்புராஜ் தொடங்கி வைத்தார் உடன் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வாணி ஈஸ்வரி மற்றும் அலுவலர்கள்.



■ அதிமுக உடுமலை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் உடுமலை K. ராதாகிருஷ்ணன் தனது வேட்பு மனுவினை, கோட்டாட்சியர், சிறப்பு தேர்தல் அதிகாரியிடம் தாக்கல் செய்தார். உடன் கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் .



■ உடுமலை சட்டமன்ற தொகுதி திமுக வெற்றி வேட்பாளர் மு.ஜெயக்குமார் வேட்புமனு தாக்கல். உடன் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் மாவட்ட கழக பொறுப்பாளர் ரி.ஈஸ்வரசாமி மற்றும் மதசார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள்.



■ திண்டுக்கல் தொகுதியில் திமுக சார்பாக உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமார், தேர்தல் நடத்தும் அலுவலர் பழனிவேலிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார்.






















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000